ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

24.07.2025

1. சண்முகா சடாட்சரா அப்பனே
சரவண சோதியாக அருளி
மண்ணுலகை காத்திடும் வேலவா
மகான் அரங்கனும் உமை போற்றி

2. போற்றியே விசுவாவசு ஆண்டு நள்ளி திங்கள்
புகலுவேன் ஈராம் குருவார அருளாசி
ஆற்றல்பட அரங்கன் யானும்
அடியவர்கள் உயர்வுபெற உரைப்பேன்

3. உரைக்கவே பிரணவக்குடில் நாடி
உலக மக்கள் வருகை பெருகயிருக்க
குறைவின்றி என் அடியவர்கட்கு
கூறிடுவேன் ஆற்றல்பட சேவை சிறக்க

4. சிறக்கவே அவரவர்க்கு உள்ளும்
சித்திமிகு சக்தியாக மாறியே
ஆறுமுக அரங்கன் யான் காப்பேன்
ஆற்றலாக தேகமனபலமும் கூட்டி

5. கூட்டியே அவர்கள் தொண்டு
குறைவின்றி சிறக்க அருள்வேன்
தட்டாமல் தருமம் வளர்க்கவும்
தானவர்கள் சேவை சிறக்கவும்

6. சிறக்கவும் மகத்துவம் புரிவேன்
சிறப்பான அன்னதான பலம்
அறத்தின் வழி உலகோர் அடைய
அரங்கன் யான் அன்னதான சேவை

7. சேவையை பிரணவக் குடிலில்
சிறப்பாகச் செய்து அருள்புரிய
அவணியோர் அணுகி வந்து
அன்னதான சேவைக்கும் பொருளுதவி

8. உதவி செய்து தொடர்ந்து வர
ஊழதை வென்று மீள்வர்
பதவி சுகம் ஐஸ்வர்யமென
பாருலகில் ஞானயோக வாழ்வும்

9. வாழ்வும் கண்டு சிறப்பர்
வலிமை மிக்க ஞானப்படை
தாழ்விலா சரணாகதி மிக்க
தனிப்படைகள் அரங்கனென் சபையை

10. சபையை அலங்கரித்துவர
சன்மார்க்க நெறி உலகெல்லாம்
அபயமென நிரம்பி மக்களிடையே
அளவிலா சக்தியாக மாறியே

11. மாறியே ஞான உலகம் படைக்கும்
மனிதர்களெல்லாம் மகான்களாக
மாறும் அற்புதங்களும் நிகழும்
மொழிந்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி